செ.வெ.எண்:49 நாள்:23.01.2017

# பத்திரிக்கை செய்தி

கரூர் மாவட்டத்தில் இயங்கி வரும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல பள்ளி மாணவ/ மாணவியருக்கான அரசு விடுதிகளில் தங்கிப்பயிலும் மாணவ, மாணவியர்கள் கல்வி பயில்வதை ஊக்குவிக்கும் வகையில் 10 மற்றும் 12ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில் ஒவ்வொரு பாடப்பிரிவிலும் 100க்கு 100 மதிப்பெண் பெறும் மாணவ, மாணவியருக்கு தலா ரூ.1000/– வீதம் சிறப்பு ஊக்கத்தொகை வழங்கிட சட்டப்பேரவையில் மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்கள் அறிவித்ததை தொடர்ந்து, அரசாணை (நிலை) எண்.69 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (பிந 1(2)த் துறை நாள்.15.12.2016ல் அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.

எனவே, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல அரசு பள்ளி விடுதிகளில் தங்கி 10 மற்றும் 12ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியர் அரசு பொதுத் தேர்வுகளில் 100க்கு 100 மதிப்பெண் பெறும் ஒவ்வொரு பாடப்பிரிவிற்கும் அரசின் ஊக்கத்தொகையான ரூ.1000/–த்தை பெற்று பயனடையுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கோவிந்தராஜ், இ.ஆ.ப., தெரிவித்துள்ளார்.

வெளியீடு:

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
கரூர்.